# உடுகம்பொல நாட்டைவிட்டு தப்பியோட்டம்!

(கொழும்பு)
தலைமறைவாக இருந்த முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல நாட்டைவிட்டு தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
திரு. உடுகம்பொலவின் உறவினர் இருக்கும் அமெரிக்கா
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 13 இதழ் 168
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28 07 1992

## ஆயுத தயாரிப்பு குற்றச்சாட்டு
## இரு ஈழத்தமிழர் உட்பட ஒன்பது பேர் மீது வழக்கு

(சென்னை)
ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டு இரு இலங்கைத் தமிழர் உட்பட 9 பேர் மீது
(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதியில்
## நீதிமன்ற வழிகாட்டலை அமைச்சு மீறவில்லையாம்

(கொழும்பு)
1990ம் ஆண்டு குரிய பல்கலைக் கழக அனுமதியில் உயர் நீதிமன்ற வழிகாட்டலை உயர் கல்வி அமைச்சு மீறவில்லை என அமைச்சர் ஏ. சி எஸ். ஹமீத் நாடாளுமன்றில் கூறி
(4-ம் பக்கம் பார்க்க)

## பல்வேறு காரணங்களினால்
# இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதில் பெரும் பாதிப்பு!

## குழம்பிய நிலையில் படை அதிகாரிகள்

(கொழும்பு)

**இராணுவ உயர் தளபதிகளுக்கிடையில் முரண்பாடு, நவீனரக போர்த்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படாமை, படையினர் பற்றுக்குறை ஆகிய பல்வேறு காரணங்களினால் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த இரு வருடங்களாக விடுதலைப்புலிகளுடன் நடத்தி வரும் யுத்தத்தில் படையினர் பலவேறு யுக்திகளைக் கையாண்டபோதும் புலிகளை வெல்லமுடியாது போய்விட்டது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கட்டம் கட்டமாக அரசபடையினர் நடத்திய இராணுவநடவடிக்கைகள் யாவும் தோல்வியைத் தழுவியுள்ளதுடன் பெரும் இராணுவச்செலவினங்களையும் ஏற்படுத்தியுள்ளது

இதேவேளை இராணுவஉயர் பீடத்தில அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் படை அதிகாரிகள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

இதனால் இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதில் அரசு பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. படை அதிகாரிகள் குழப்பமடைந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## தேங்காய் எண்ணை ம. எண்ணை விலை விபரம்

(யாழ்ப்பாணம்)
மண்ணெண்ணை ஒரு லீற்றர் 30 ரூபாவுக்கும், தேங்காய் எண்ணை லீற்றர் 65 ரூபாவுக்கும் விற்பனை செய்யுமாறு தமிழீழக்காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## ரோகணவின் சகோதரரும் மைத்துனர்களும் கடத்தல்

(கொழும்பு)
ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீரவின் சகோதரரும், இரு மைத்துனர்களும் இனந்தெரியாத கும்பலொன்றினால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் வீடுகளிலிருந்த போதே இவர்கள் நள்ளிரவில் இலக்கத்தகடற்ற வான் ஒன்
(4-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த தேரர்களைவிட தொண்டா சக்தி மிக்கவர்

(கொழும்பு)
மகாநாயக்க தேரர்களைவிட அமைச்சர் திரு. தொண்டமான் மிகவும் சக்தி வாய்ந்தவர் என அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் பேராசிரியர் எம். ஜி. ஆரியபால கூறியுள்ளார்.

இந்த நாட்டிலுள்ள சகல மகாநாயக்கதேரர்களையும் விட திரு தொண்டமான் சக்தி வாய்ந்து விளங்குவதாக மேற்படி காங்கிரஸின் எழுபதாவது மாநாட்டில் உரையாற்றுகையில் பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

தம்புள்ள கந்தலகமவில் சகல பௌத்த பீடங்களினதும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஹோட்டல்கட்டப்படுவதையே பேராசிரியர் இவ்வாறு சூசகமாகக் குறிப்பிட்டார் (சி)

## பீப்பாகுண்டுவீச்சை மறைக்க படை அதிகாரிகள் முயற்சி

(கொழும்பு)
தமிழ் பகுதிகளில் விமானப் படையினர் மேற்கொண்ட பீப்பாக்குண்டுத் தாக்குதல்களை மூடிமறைக்கும் நடவடிக்கையில் படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிறிலங்கா விமானப்படை உயர் அதிகாரி விங் கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடி, இராணுவப் பேச்சாளர் சரத்
(4ம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்புமாறு மீண்டும்
### ஈழ அகதிகளுக்கு அச்சுறுத்தல்

(சென்னை)
தமிழகத்தில் தங்கியுள்ள ஈழஅகதிகளை தாயகம் திரும்புமாறு தமிழக பொலிஸாரும், அதிகாரிகளும் பெரும் நெருக்கடிகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இலங்கையில் தொடர்ந்து தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் இராணுவத் தாக்குதல்களினால் தாயகம் திரும்புவதற்கு அகதிகள் அச்சம் தெரிவித்துள்ளபோதிலும், அவர்களைத் திருப்பி அனுப்புவதில் இந்திய அரசு அக்கறை காட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் வழங்குவதில்கூடத் தமிழக
[4ம் பக்கம் பார்க்க]

## திருமலையில் சிங்கள மீனவர் வீடுகள் தீக்கிரை

(திருமலை)
திருமலை கோணேஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள மீனவர்களின் 67 வீடுகள் தீக்கிரையாகி முற்றாக சாம்பரானது. தற்செயலாக ஏற்பட்ட
[4-ம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டு போருக்கு பெருமளவு பணம் செலவு

(கொழும்பு)
தற்பொழுது வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்காக பெரும் தொகையான பணத்தை அரசு செலவிட்டு வருவதாக ராஜாங்க அமைச்சர் அஸ்வர் கவலை வெளியிட்டுள்ளார்.

கல்பிட்டிப்பகுதியில் அண்மையில் நடைபெற்ற பிரதேச சபையின் முதலாவது ஆண்டு தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கவலை வெளியிட்டார். (க)

## சொட்டு நீரும் எங்கள் சொத்தே

## அவசர புனர்வாழ்விற்கு 29 கோடி ரூபா தேவை

(கொழும்பு)
வடக்கு கிழக்கில் அவசர புனர்வாழ்வு புனர் அமைப்பு நடவடிக்கைகளுக்கு 29 கோடி ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டநிதியை விட மேலதிகமாக இத்தொகை தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 29 கோடியே 30 லட்சம் ரூபாவில் 14 கோடி 34 லட்சம் ரூபாவை இலங்கை வங்கி கடனாக வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

தோட்டக்காணி 8 பரப்பு கிணற்றுப்பங்குடன்—அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர், அல்வாய் தெற்கு, அல்வாய். (சி-6596)

### புத்தகம்

''நாமம் சொல்லுவோம்'' (நமனை வெல்லுவோம்) விலை ரூபா: 18/— வெளியீடு: நடுவுத்துருத்தி 388/6, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் தபாற் செலவு இலவசம். (சி-6590)

### விண்ணப்பப் படிவம்

எழுதுநர் சேவைக்கான படிவம் விற்பனையாகிறது. விலை ரூபா 4/- எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (சி- 6597)

### பல் கட்டுமிடம்

உங்கள் பற்களை குறைந்த விலையில் ஒரே நாளில் கட்டி செல்வதற்கும் கண்களை பரிசோதனை செய்து கண்ணாடி எடுப்பதற்கும் சிறந்த ஸ்தாபனம். D.சேனதிராஜா M.H.D.I., இல. 146 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-6585)

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சனை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி), நல்லூர். (சி 6589)

### வல்லாரைக் குளிசை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules. கிடைக்குமிடம் எஸ், ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6553)

### ஜோதிடன்

09-09-1992 வரை சோதிடம் கற்றுக் கொடுக்கவும் பார்க்கவும் நாடுங்கள். ''Shy Anbugee'' 613542116 V Front of Jaffna Hospital Anpugee என வேறு கிளை கிடையாது. இலங்கையில் பிறந்தோருக்கு மட்டும் (சி-6602)


## இந்திய காவற் படையால் 100 வெளிநாட்டு படகுகள் கைப்பற்றப்பட்டன

[சென்னை]

இந்திய கடல் எல்லையில் அத்துமீறிவந்த வெளிநாட்டு மீன்பிடிப்படகுகள் நூற்றுக்கு மேற்பட்டவையை கடந்த இரண்டு ஆண்டுகளில் கடலோர காவறபடைகைப்பற்றியுள்ளதாக அதன் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளரிடையே பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடலோரப்படையின் மிகப் பெரிய போர்க்கப்பலான 'சமர்' அடுத்த மாதம் இயக்கி வைக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## இன்று

[கொக்குவில்]

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கிவந்த தையல் பயிற்சி நிறைவு நாளையொட்டி தையல் கண்காட்சி ஒன்றை இன்று 28ம் திகதி நடத்தவுள்ளது.

கண்காட்சியின் இறுதியில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இச்சங்கம் இலவச தட்டச்சு பயிற்சி வகுப்புக்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (135)

## சவர்க்காரம் சிக்கியது

(அரியாலை)

யாழ். கச்சேரிநல்லூர் வீதியில் உள்ள ஒரு வீட்டிலிருந்து வர்த்தகர் ஒருவர் பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சவர்க்காரங்கள் கடந்த 23-ம் திகதி யாழ். காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

இச்சவர்க்காரப் பெட்டிகளை கறையான் அரித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. (59)

## இராசி பலன்

28-07-1992
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஆடி 13)

திரயோதசி காலை 6–18 வரை திருவாதிரை மு. ப. 11-08வரை மரணயோகம். இராகு காலம் மாலை 3–03 முதல் 4-33வரை. சுபநேரம் காலை 10-33 முதல் 12-03வரை

மேஷம்: சமய ஞானம், மேலதிகாரிகள் வரவு. குடும்ப சுகம்.

இடபம்: குடும்பமுரண்பாடு யோசனை, பயண துன்பம்.

மிதுனம்: உறவினர்வருகை. தொழில் சிறப்பு. தாய்ப்பாசம்,

கடகம்: இடம்பெயர்வு, குடும்பக் கஷ்டம், அலைச்சல்

சிங்கம்: குறுக்குவழி சம்பாத்தியம், உயர்ந்த நிலை. புத்திரர் பெருமை.

கன்னி: சுடினவாக்கு சோம்பேறித்தனம், காரிய சித்தி.

துலாம்: பயனில்லாசெலவு, அடிமைத்தனம், தொழில் பாதிப்பு

விருச்சிகம்: சகோதரர் பகைமை நாணயம் தவறுதல், உடல் உபாதை.

தனுசு: குடும்ப மகிழ்ச்சி. தொழில் முதலீடு. இறைவழிபாடு.

மகரம்: உயர்ந்த அந்தஸ்து. வேலைப்பளு. பணவரவு.

கும்பம்: உடல்நலக்குறைவு. மனசஞ்சலம், வேண்டாத தொல்லை.

மீனம்: நம்பிக் கெடுதல், காரிய தாமதம், கருத்து வேறுபாடு.

— ஜோஸ்யர்

## துர்க்கை அம்மன் கோவிலில் ஆடி அமாவாசை தீர்த்தம்

(காங்கேசன்துறை)

ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் நாளை 29ம் திகதி புதன்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் முருகனின் வேல் வைக்கப்பட்டு 24 தினங்கள் விசேடபூசைகள் இடம் பெற்றன.

25வது நாளான ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் நாளை புதன்கிழமை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இந்துக்களின் முக்கியவிரத தினமான ஆடி அமாவாசையன்று தர்ப்பணம் செய்து தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவோருக்கு வசதியாக இந்த உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (86)

## விவசாய அறிவு போட்டி

(உடுவில்)

சுன்னாகம் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான விவசாய அறிவுப் போட்டிகள் நாளை 29-ம் திகதி புதன்கிழமை சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (109)

## நஷ்டஈடு பெற வாக்காளர் இடாப்பை அனுப்புமாறு பணிப்பு

[மானிப்பாய்]

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு நஷ்டஈடு கோரி விண்ணப்பித்த அரச ஊழியர்கள் அவர்களின் வாக்காளர் அட்டவணை இடாப்புகளின் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடந்த 87-ம் ஆண்டு பிற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் நஷ்டஈடு கோரி தத்தமது பகுதி மாவட்ட செயலகங்கள் ஊடாக புனர்வாழ்வு புனரமைப்பு திணைக்களத்திற்கு விண்ணப்பம் செய்துவிட்டு நஷ்டஈட்டுக்கான தொகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்

ஆனால் தற்போது இவர்களின் வாக்காளர் அட்டவணை இடாப்புகளின் பிரதிகளை உடன் அனுப்பி வைக்குமாறு மேற்படி திணைக்களத்தினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [71]

## விமான விபத்து 71 பேர் பலி

(ஜாகர்த்தா)

இந்தினேசியாவின் கிழக்குப் பகுதியில் அம்பூல் பிரதேசத்தில் மண்டேலா விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் 64 பிரயாணிகளும் 7 விமானிகளும் உயிரிழந்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (சு)

## உயர் கல்விக்கான புலமைப் பரிசில்

[கொழும்பு]

வெளிநாடுகளில் பட்டப் பின்படிப்பை மேற்கொள்வதற்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களை உயர் கல்வி அமைச்சு பட்டதாரி மாணவர்களிடமிருந்து கோரவுள்ளது.

நியூசிலாந்து, ஐக்கிய இராச்சியம், கனடா, ஹெங்கொங், நைஜீரியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பட்டப்பின் படிப்பு பயிலுதற்காகவே மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளையில் ஜப்பானிய அரசினால் பட்டதாரி ஆராய்ச்சிப் பகுதியில் கல்வி பயிலுவதற்காக புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பமும் கல்வி உயர் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க)


மண்ணில் இருந்து விண்ணிற்கு

அஞ்சலி

1992



அமரர்

பொன்னையா கதிரவேலு

18-04-19?6
28-07-1983

வருடாந்த

மதச்சடங்குகள் 17-08-92ல் லண்டனில் நடைபெறும்.

(சி-6568)


## திலீபன் நினைவுகேடய மாவீரர் தடகளவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் மாவீரர் தடகள விழா (தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கானது) செப்ரம்பர் 3, 4, 5, 6 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மாத்திரம் நடைபெற இருக்கும் இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஆகஸ்ட் 10ம் திகதி என அறிவிக்கப்படுகின்றது.

போட்டிக்கான விண்ணப்பப்பத்திரங்களை அவ்வப்பகுதி விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும், வட்டச்செயலகங்களிலும் ஆகஸ்ட் 1ம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். தடகள போட்டிகளுக்கு தனியான விண்ணப்பமும், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், வேகநடைப் போட்டிகளுக்கு தனியான விண்ணப்பமும் கொடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஸ்ரீமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பேணுவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதாக கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (க)

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

மனநோயாளர் வைத்திய சாலை உபயோகத்துக்கென ஜெனறேற்றர்ஒன்று அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் சுகாதார திணைக்களத்தாரால் வழங்கப்பட்டுள்ளது. (154)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

அரச, கூட்டுத்தாபன, மாகாண அரசசேவைகளில்
3500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்

**எழுதுவினைஞர் சேவை**

அதனோடு இணைந்த சேவைகளை நிரப்புவதற்கான

**போட்டிப்பரீட்சை**

SEP. மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

**விசேட பயிற்சி வகுப்புகள்**

**ஆரம்பம்: 1-8-92 மு.ப. 9 மணி**

பாடநெறி: (I) மொழிப்பயிற்சி,
(II) தகுதித்தேர்வு
(III) கணக்குப்பதிவு

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறைநாட்களில்
★ கட்டணம்: ரூ. 150/- (ஒவ்வொரு பாடநெறிக்கும்)
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்

விபரங்களுக்கு:

**Astan Institute**

101/10, STANLY ROAD, JAFFNA
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

(எ-2327)

# வில்லூன்றி புனித தீர்த்தம்:

## பிதிர்க் கடனாற்றத் தலைசிறந்த தலம்

ஆடி மாதம் பிறந்தவுடன் சைவப் பெருமக்களுக்கு பிதிர்களின் நினைவுதான் முதலில் வரும். பிதிர்க் கடனுக்குரிய ஆடி அமாவாசை தினம் எப்போ என்பதை பஞ்சாங்கத்திலோ அல்லது நாள்காட்டியிலோ பார்த்து வைத்துக் கொள்வர். நம் முன்னோரை நினைவுகூருதற்குரிய அத்துணை முக்கியத்துவமான தினம் ஆடி அமாவாசை. அது இவ்வாண்டு நாளை 29-ம் திகதி புதன் கிழமை அமைகிறது. இத்தினத்தில் சைவப்பெருமக்கள் புண்ணிய தீர்த்தமொன்றில் நீராடி அத்தீர்த்தக்கரையில் பிதிர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து சிவவழிபாடாற்றி விரதமிருந்து தம்முன்னோரை நினைவுசெய்துகொள்வர்.

டும் புனரமைக்கப்பட்டு தினமும் பல அந்தியேட்டிக்கிரியைகள் இப்போ நடைபெற்று வருகின்றன. ஆயினும் கடந்த முப்பது வருடங்களாக வில்லூன்றி தீர்த்தம் சுத்தம் செய்யப்படாததால் அது இப்போதும்பாவனைக்குகந்ததாயில்லை.

கடந்த இருபது ஆண்டுகளாக வில்லூன்றி தீர்த்தம் பொலிவு குன்றியிருந்தபோது சைவமக்கள் தம் முன்னோர்க்கான கடமைகளைச் செய்ய கீரிமலைக்கும் திருவடிநிலைக்கும் செல்லவேண்டியேற்பட்டது. இது பெரும் போக்குவரத்துப் பிரச்சனையை உண்டுபண்ணிய போதிலும் வேறு சமீபத்திய இடமின்மையால் மக்கள் அதிக பொருட்செலவில் கீரிமலைக்கே செல்லவேண்டியிருந்தது. இன்று போக்குவரத்துப் பிரச்

அமாவாசை தர்ப்பணங்கள் செய்யக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியுள்ளதுடன் அடுத்த ஆண்டு ஆடி அமாவாசை தினத்தின் முன் வில்லூன்றி தீர்த்தத்தினை துப்பரவு செய்து சைவப்பெருமக்களின் பாவனைக்குகந்ததாக்க நடவடிக்கையெடுத்து வருகிறது.

### பேராசிரியர் இ. குமாரவடிவேல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த புனிதமிக்க மூன்று தீர்த்தங்கள் உள்ளன. அவை வில்லூன்றி, கீரிமலை, திருவடிநிலை ஆகியனவாம். இவ்விடங்களுள் யாழ் மாநகரில் அமைந்திருப்பது வில்லூன்றி. யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து ஒருமைல் தொலைவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இங்கு வில்லூன்றி தீர்த்தத்துடன் அந்தியேட்டி மடம், யாத்திரிகர் மடம், இராமர்கோவில் என்பனவும் அமைந்துள்ளன. சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் ஆயிரக்கணக்கான சைவமக்கள் ஆடி அமாவாசை மற்றும் புண்ணிய தினங்களில் வில்லூன்றி தீர்த்தத்திற்கு வருகைதந்து சங்கமித்து நீராடி தர்ப்பணம் செய்து பிதிர்க் கடன்கள் ஆற்றிவந்தனர். மடங்களில் அந்தியேட்டிகள் செய்தனர். ஆயினும் கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால் வில்லூன்றி தீர்த்தம் பொலிவிழந்திருக்கின்றது. 1988 ஆம் ஆண்டு அந்தியேட்டி மடங்கள் மீண்

சனை மிக மோசமாகிவிட்டதுமன்றி கீரிமலை பொதுமக்கள் அணுகவொட்டா நிலையிலுள்ளது. இதனால் பொதுமக்கள் எங்கு பிதிர்க்கடன் ஆற்றுவது, எங்கு அந்தியேட்டி செய்வது எனவறியாது தடுமாறி வேதனையடைகின்றார்கள்.

அகால மரணங்களும் அவச்சாவுகளும் தூரவிடத்து அணுகமுடியாவிடத்து சாவுகளும் மலிந்துள்ள இக்காலகட்டத்தில் இந்த விருப்பம் மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம். மனநிம்மதி பல நோய்களைத் தீர்க்கின்றது. ஆகவே இன்று இதற்குரிய வசதிகளைச் செய்துகொடுப்பது சமயசேவை மட்டுமன்றி சமூகசேவையுமாகின்றது.

இதனை அறிந்த யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அவர்கள் வில்லூன்றி புனித தீர்த்தத்தை விரைந்து புனரமைத்தற்பொருட்டு வில்லூன்றி புனித தீர்த்தப் பரிபாலன சபையொன்றை நியமித்துள்ளார். சபை வில்லூன்றி புனித வளாகத் தீர்த்தத்தில் இவ்வாண்டு

அந்நியராட்சியில் பொலிவிழந்து கிடந்த வில்லூன்றி தீர்த்தம் அமைந்திருந்த நிலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஒல்லாந்த தேச அதிபதிகளுடன நட்புரிமை கொண்டு, அச்செல்வாக்கின் மூலம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலை அமைத்த சைவநற் தொண்டன் ஸ்ரீமான் வைத்தியலிங்கச் செட்டியார் அரசிடமிருந்து பெறப்பட்டு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குரிய தீர்த்தமாக்கப்பட்டது. பிரதி வருடமும் மாசி மக தினத்தன்று வண்ணை வைத்தீஸ்வரர் அன்னை தையல்நாயகியுடன் தீர்த்தமாடும் பொருட்டு வில்லூன்றிக்கு எழுந்தருளுவது 1940 ஆம் ஆண்டுகள் வரை நடைமுறையிலிருந்தது. வில்லூன்றிச் சிவாலயம் இருந்தவிடத்து வழிபடப்பட்டு வந்த விநாயகர் இன்று அமைந்துள்ள வில்லூன்றி விரகத்தி விநாயகராலயத்தில் கோவில் கொண்டதும் முதல் வில்லூன்றி தீர்த்தம் அக்கோவிலுக்குரிய தீர்த்தமாகவும் அமைபலாயிற்று. வில்லூன்றி தேவஸ்தானத்தில் பேணப்பட்ட தகவல்களிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை வில்லூன்றி விநாயகர் தீர்த்தமாடும் பொருட்டு ஆடி அமாவசை, சித்திரா மகா பூரணை மகாசிவராத்திரி மறுதினம் ஆகிய தினங்களில் எழுந்தருளியதை அறியமுடிகிறது. (அ)

# சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவி சந்திரிகாவுக்கு?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின தலைமைப்பதவி திருமதி சந்திரிக்கா விஜயகுமாரணதுங்கவுக்கு கிடைக்கலாம் என கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான முன் ஏற்பாடுகளில் அவரது தாயார் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஈடுபட்டு வருவதாகவும் கட்சியின மீது தமக்கிருந்த அதிகாரத்தை படிப்படியாக குறைத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அத்தனகலையில நடைபெறவுள்ள ஸ்ரீ. ல. சு. கட்சிக் கூட்டத்திற்கு சந்திரிக்கா தலைமை வகிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அத்தனகலை சம்மேளனத்தின் செயலாளராக திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க கடந்த சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டமை கட்சியின் தலைமைக்கு இவர் தெரிவாவதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கை என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

# மோட்டார் வாகன புகையினால் நரம்புத் தளர்ச்சி இருதயநோய் ஏற்படுகிறது

(கொழும்பு)

மோட்டார் வாகனத்தில் இருந்து வெளியேற்றப்படும் புகையில் நரம்புத் தளர்ச்சி, இருதய நோய் போன்றவை ஏற்படுவதாக சுகாதார அமைச்சு கூறுகிறது.

இந்த நச்சுப்புகையினால் சிறுவர்கள் அதிகம் பாதிப்படைகின்றர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 வருடகாலத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் 1983ம் ஆண்டில் 4 லட்சத்து 40,000 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டது. இப்பொழுது அவை 9லட்சமாக அதிகரித்துள்ளது.

இந்த வாகன நச்சுப்புகையில காபனீர் ஒக்சைட்டும், கந்தக ஒக்சைட்டும், உள்ளன. இவற்றினால் சுவாசத்தில் பிராணவாயு பற்றுக்குறை ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்துகிறது. சிறு குழந்தைகளுக்கு பாரிசவாதம், மூளை அழற்சி ஆகிய நோய்கள் ஏற்படுகின்றன எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (சு)

# 1988-ம ஆண்டு கிளர்ச்சி: இராணுவ அதிகாரி உட்பட 6 படையினர் கைதாவர்

(கொழும்பு)

1988ம் ஆண்டு நடைபெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது காணமற்போன 31 மாணவர் தொடர்பாக ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி, 6 இராணுவத்தினர், ஒரு பாடசாலை அதிபர் ஆகியோர் விரைவில் கைதுசெய்யப்பட உள்ளனர்.

எம்பிலிப்பிட்டியாவில் வைத்தே மேற்படி 31 மாணவர்களும் காணமற்போனதாகவும் இவ்விடயம் சம்பந்தமாக மேற்படி நபர்கள் பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இதனை அடுத்தே இவர்கள் கைதுசெய்யப்படவுள்ளதாகவும்பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழீழ தொழில்வளகண்காட்சி விரைவில் நடைபெறவிருக்கிறது

(யாழ்ப்பாணம்)

விரைவில நடைபெறவிருக்கும் தமிழீழ தொழில் வளகண்காட்சியில் எமது கலை, பண்பாடு இலக்கியங்களின் பழமையையும், தோற்றப் பொலிவையும், சிறப்பையும் உள்ளடக்கிய தனிப் பகுதி ஒன்றை அமைத்து மக்கள் பார்வைக்கு வைக்க விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகம் கண்காட்சி அமைப்பாளர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக் கழக நடுவப் பணியகம் இது தொடர்பாக வெளிட்டுள்ள அறிக்கையில் எமது காட்சியகத்தில் வைப்பதற்கான பழமை வாய்ந்ததும், பெறுமானம் உள்ளதுமான மரத்தில், உலோகத்தில், கல்லிலான சிற்பங்கள். விளக்குகள், விருதுகள், தாம்பாளங்கள், அரும்காட்சிப் பொருட்கள், ஏட்டுச்சுவடிகள், சான்றிதழ்கள், தேடக்கிடைத்தற்கரிய பிரசுரங்கள், புத்தகங்கள், பழமையான வாத்தியக் கருவிகள், ஓவியங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களைப் பிரதிபலிக்கும் வேறு பொருட்கள் முதலியவற்றைதமிழ்மக்களிடமிருந்து எதிர்பார்கின்றோம்.

மக்களிடமிருந்து பெறப்படும் பொருள்கள் யாவும் சிதைவுறாது காப்பாற்றி மீள ஒப்படைக்கப்படுவதில் மிகச் சிரத்தை எடுக்கப்படும். எனவே தமிழீழ மக்களிடமிருந்து பெரியளவில் எதிர்பார்க்கப்படும் இந்தப் பொருள்களை கண்காட்சியில் வைப்பதற்காகவும். பலர் கண்டுகளிக்க வாய்ப்பளிப்பதற்காகவும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் மனமுவந்து ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

காலத்தின் தேவையான இந்தக் கண்காட்சியின் வெற்றிக்கு அனைத்து மக்களுடைய பங்களிப்பையும வேண்டி நிற்கின்றோம். பொருள்களை ஒப்படைப்போர் கோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் ஒப்படைத்து அதற்கான உறுதிப் பத்திரத்தைப்பெற்றுக்கொள்ளவும் (அ

# முதல்வர் ஜெயலலிதா விமர்சனங்களைத் தாங்கும் மனவலிமை அற்றவர்

[மணிலா]

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விமர்சனங்களை தாங்கும் மனவலிமையற்றவர் என 'வெரித்தாஸ்' வானொலி விமர்சித்துள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் அரசை விமர்சித்த பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் கைதாகியுள்ளனர்.

இதேவேளை செல்வி ஜெயலலிதா பழிவாங்கும் போககுடையவர். மிரட்டும் பாணியில் பல செயல்கள் செய்கிறார் என கலைஞர் கருணாநிதியும், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ் கட்சி உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். (கே)

# தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகள் குழு

(யாழ்ப்பாணம்)

போர்க்கால சூழ்நிலைகளில் அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் எவ்வாறு செயலாற்றவேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் உதவி அரசாங்க அதிபர்பணிமனையில் திரு. க. குணராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கட்டான சூழ்நிலைகளில் சிறுவர் பாதுகாப்பு நிலையமும் அதற்கு உதவியாக மனித முன்னேற்ற நடுநிலையமும் உடனடியாக செயற்பாடுகளில் இறங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக தொண்டர் ஸ்தாபனங்கள் அனைத்தும் முன்கூட்டியே போதிய உணவுப் பொருட்கள். உடைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதென்றும், சுகாதாரம், குடிநீர் வசதிகள் போன்றவற்றை உடனடியாக மேற்கொள்வதற்கு ஆவன செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி செயற்பாடுகளை செய்வதற்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் க. குணராசா தலைமையில் தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (வி)

# "தமிழர்கள் எதிரியின் — விமானங்களை சுட்டு வீழ்த்துவர் என்று பாடியவர் காசி ஆனந்தன்"

## தமிழன் கனவு வெளியீட்டு விழாவில் உரை

[யாழ்ப்பாணம்]

''தமிழர்கள் எதிரியின் விமானங்களை சுட்டு வீழ்த்துவர் என்று அன்றே கவிதைகளிற் பாடிவிட்டவர் கவிஞர் காசி ஆனந்தன். இன்று இது நிதர்சனமாகிவிட்டது'' என்று விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரன் கவிஞர் காசி ஆனந்தனின் 'தமிழன் கனவு' நூல் வெளியீட்டுவிழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

யோகரத்தினம் யோகி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''காசி ஆனந்தன் தீர்க்கதரிசனமுள்ள ஒரு கவிஞராவார். இன்று தமிழர்களுக்கு சிங்கள அரசாங்கத்தால் கொடுக்கப்படும் நெருக்கடிகளும், அந்த நெருக்கடிகளைத் தமிழர்கள் தமது வீரத்தினால் முறியடிப்பதையும் அன்றே கவிதைகளில் பாடியவர்''.

அவரது குடும்பமே தமிழீழ போராட்டத்துக்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான ஒரு கூட்டம் நாளை புதன்கிழமை 29ம் திகதி பி. ப. 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

பிரபா விவகாரம்

# இந். அதிகாரிகள் வருவதற்கு இல. தற்போது அனுமதியாது

## இலங்கைத் தூதுவர் தகவல்

(புதுடில்லி)

ராஜிவ், கொலை தொடர் பாக புலிகள் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் இந்தியா உத்தியோகபூர்வமாக கோரிய பின்பே இந்திய விசேட புலனாய்வுதுறை அதிகாரிகள் இலங்கைவர அனுமதிக்கப் படுவார்களென புதுடில்லியிலுள்ள இலங்கை தூதர் டாக்டர் நெவில் கனகரத்ன கூறியுள்ளார்.

இதுவரை நாடுகடத்தல் தொடர்பான கோரிக்கை எதனையும் இலங்கையிடம் இந்திய அரசு விடவில்லை. இதன் பின்பே அதுபற்றி ஆராயப்படும்.

அதுவரை இவ்விவகாரம் தொடர்பாக மேலதிக விபரங்களை திரட்ட இந்திய விசேட புலனாய்வுத்துறை வழக்கறிஞர்கள் இலங்கை வருவது நல்லதல்ல என்றும் டாக்டர் நெவில் கனகரத்ன கூறியுள்ளார். (சி)

## கெற்பலிப் பகுதியில் குடியேற மக்கள் தயக்கம்

(யாழ்ப்பாணம்)

கெற்பேலிப் பகுதியில், மக்கள் குடியேறத் தயக்கம் காட்டுவதனால் அக்குடியேற்றத் திட்டம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது என்று யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கெற்பேலி குடியேற்றத் திட்டத்தில் 2 ஆயிரம் குடிசைகள் அமைக்கும் திட்டம் நடைமுறையில் இருக்கும் இவ்வேளையில், இதுவரை அங்கு 500 குடிசைகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர், யாழ். நகரை அண்டிய பகுதிகளிலேயே குடியிருக்க விரும்புகின்றனர். இதனால் நகரப் பகுதிகளில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (வி)

## வெடி விபத்து: ஒருவர் பலி

(சென்னை)

வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கிய வெடி மருந்துத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் கொலைலப்பட்டார். இரண்டு பெண்கள் படுகாயம் அடைந்தனர்.

மூலப் பொருட்களைக் கலக்கும்பொழுதே இவ்வனர்த்தம் ஏற்பட்டதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இறந்தவர் மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## விஞ்ஞானக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று இறுதி நாளாக நடைபெறும் விஞ்ஞானக் கண்காட்சியில் மாணவர்களுடன் ஏனையோரும் அனுமதிக்கப் படுவார்கள். (மா)

### தமிழர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழனுக்கு நாடுவேண்டும் தமிழன் தமிழாகை வாழவேண்டும் அவன் தலைநிமிர்ந்து வீறுநடை போடவேண்டும் என்று தமிழ்நாடு, தமிழ் மொழி, என்ற வகையில் உணர்ச்சி கொண்ட கவிஞராக உள்ளார்.

1958ம் ஆண்டு நடைபெற்ற சிங்களசிறி அழிப்பு இயக்கம் நடைபெற்றபோது மட்டக்களப்பு காவல் நிலையத்தில் சிங்களவர்சகங்களை அழித்தவர் அதனால கடுமையாக அவர் தாக்கப்பட்டு காசநோய்க்கு ஆளாகியவர்.

அவர் தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் கூட ஈழத்தமிழர் விடுதலை மொழிக்காக பல போராட்டங்களை நடாத்தியவர்.

புலி 'படை ஈழத்தில் தோன்றும் என்று தன் கவிதைகள் மூலம் அன்றே குறிப்பிட்டவர்.

பல ஆண்டுகள் சிறையில் வாழ்ந்த கவிஞர், தமிழீழ விடுதலைப் புலிகளோடு முழுமையாக தம்மை இணைத்துக் கொண்டவர்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை, குழந்தைவேலு பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் நூல்பற்றி ஆய்வுரை செய்தார்கள். (சு)

## கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

[யாழ்ப்பாணம்]

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வைத்திய நிபுணர்களினால் சிபார்சுசெய்யப்பட்ட நோயாளர்கள் எதிர்வரும் 3ம் 4ம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் தங்களை பணிப்பாளர் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப் படுகின்றனர்.

நோயாளர்கள் வரும்போது அடையாள அட்டை, வைத்திய நோய்க்கூற்று அத்தாட்சிப்பத்திரம் உட்பட ஏனைய ஆவணங்களை கொண்டுவருமாறும் கேட்கப்படுகின்றனர். (56)

## ஐந்து மீனவரை. காணவில்லை

(மட்டக்களப்பு)

காத்தான்குடியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. இவர்கள் பயணம் செய்த மீன்பிடி வள்ளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தாயகம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரிகள் பெரும் கெடுபிடிகளைச் செய்துவருகின்றனர்.

பொலிஸாரும், அதிகாரிகளும் இலங்கை திரும்புமாறு அகதிகளைப் பல வகையிலும் அச்சுறுத்தி வருகின்றனர்.

இந்த அச்சுறுத்தல் காரணமாக 10 ஆயிரம் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். (ரி)

### பீப்பாக்குண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முனசிங்கா ஆகியோர் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் விமானப் படையினர் மேற்கொண்ட பீப்பாக்குண்டு வீச்சு செய்திகளை மூடிமறைக்க முயற்சி செய்தபோது செய்தியாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்து அவர்களைத் திணறடித்தனர்.

பீப்பாக்குண்டு என்ற ஒரு பொருளே தம்மிடம் இல்லை எனவும் அது போன்ற குண்டுகளைத் தாம தயாரிக்கவில்லை எனவும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானப் படையினர் நடத்திய பீப்பாக்குண்டுத்தாக்குதல்களை பத்திரிகையாளர்கள் ஆதாரத்துடன் இந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் எடுத்துக் கூறினார்கள். (ரி)

### உடுகம்பொல

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வுக்கோ அல்லது கனடாவுக்கோ அவர் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் அறியப் படுகிறது.

அவர் எங்கு சென்றுள்ளார், எப்படி நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார் என்பது பெரும் புதிராகவே உள்ளது.

அண்மைக் காலங்களில் அரசின் மரண அதிரடிப்படை, 'கறுப்புப் பூனைப் படை'. நடத்திய மர்ம மரணங்கள் பற்றிச் செய்திகள் வெளியிட்டதுடன் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார் திரு. உடுகம்பொல.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரகசியமான ஒரு இடத்தில் வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்தித்து ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசின் மரண அதிரடிப்படை நடத்திய மரணங்கள் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். (கே)

### திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிபத்திலேயே மீன் சந்தைக்கு முன்பாக இருந்த இவ்வீடுகள் காலை 11-30 மணியளவில் தீக்கிரையானது.

தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு இராணுவத்தின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள மீனவர்களின் வீடுகளே இவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸி)

### தேங்காய்எண்ணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் யாழ் குடாநாட்டில் உள்ள வர்த்தகர்கள் வெளியிலிருந்து கொண்டுவரும் மண்ணெண்ணெய், தேங்காய்எண்ணெய் என்பவற்றை மறு அறிவித்தல்வரை இந்த விலைகளில் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப் படுகின்றனர். (ரி)

### ஆயுத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோயம்புத்தூர் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டவிரோதமாகத் துப்பாக்கிகளையும், நாட்டு வெடிகுண்டுகளையும் தயாரித்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தடா சட்டத்தின் கீழ் விசேட நீதிமன்றிலேயே இவ்வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. (சி)

## பார்சிலோனு ஒலிம்பிக் நாடுகள் பெற்ற பதக்கங்கள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சோவியத் | 4 | 1 | |
| சீனு | 2 | 4 | |
| ஐக்கிய அமெரிக்கா | 3 | 1 | 2 |
| பல்கேரியா | 1 | 1 | |
| ஹங்கேரி | 1 | 1 | |
| ஜெர்மனி | 1 | | 2 |
| அவுஸ்திரேலியா | 1 | | 1 |
| தென்கொரியா | 1 | | |
| பிரான்ஸ் | | 2 | 1 |
| சுவீடன் | | 1 | 1 |
| இத்தாலி | | 1 | |
| யூகோஸ்சிலாவியா | | | 1 |
| நெதர்லாந்து | | | 1 |
| பின்லாந்து | | | 1 |
| ருமேனியா | | | 1 |
| மங்கோலியா | | | 1 |

(கே)

## திட்ட கமிஷன் அதிகாரி ராஜினுமா

(புதுடில்லி)

3000 கோடி ரூபா பங்கு மார்கட் ஊழல் விவகாரம தொடர்பாக திட்டக் கமிஷன் அதிகாரி கிருஷ்ணமூர்த்தி தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

இந்தியாவில் ஊழல்பங்கு மார்க்கட் விவகாரம் தொடர்பாக பதவி விலகிய இரண்டாவது நபர் இவராவர்.

ஏற்கனவே அமைச்சர் ப. சிதம்பரம் தமது பதவியை ராஜிநாமா செய்தது தெரிந்ததே. [க]

### பல்வேறு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலையிலுள்ளனர்.

மேலும் படைகளுக்கு ஆள் திரட்டும்போது படைகளில் சேர்வதற்கு பல இளைஞர்கள் அச்சம் தெரிவித்துள்ளதனால் படையினர் பற்றாக்குறையை நிரப்பமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

படை நடவடிக்கைகளை மீண்டும் தொடர்வதற்குப் புதிய ரக விமானங்கள், போர்த் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு வசதிகள் தற்போது இல்லை. இத்தகைய பல்வேறு காரணங்களினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ரி)

### ரேகண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றில் வந்த கும்பலொனறினல் ஆயுதமுனையில் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கடத்தல் விவகாரம் தொடர்பாக உயர்மட்ட பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### பல்கலைக் கழக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளார்.

1990ம ஆண்டுக்குரிய பல்கலைக் கழக அனுமதியில் வட பகுதியில நடைபெற்ற விசேட பரீட்சை மூலம் தமிழ் மாணவர்களின் அனுமதியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்: பல்கலைக்கழக அனுமதி விவகாரத்தில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு, உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளிலிருந்து எந்தவிதத்திலும் விலகிச் செல்லவில்லை.

உயர்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட வழிகாட்டல்களை மானிய ஆணைக்குழு உறுதியாக பின்பற்றுவதாகவும் தெரிவித்தார். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம்

கோண்டாவில் வடக்கு கந்தர் பொன்னுத்துரை (பிரபல புரேக்கர் பண்டா)யின் அன்பு மனைவி திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம் அவர்கள் [27-7-92]ல் காலமாகிவிட்டார். இவர் ஸ்ரீகாந்தன் (பிள்ளையார் லொறி உரிமையாளர்), ஸ்ரீபாலன் (நிவேதா ருன்ஸ்போட் உரிமையாளர்), திருமதி அருளேஸ்வரியின் அன்புத்தாயாரும் சிவலோகநாதன் [லொறி உரிமையாளர்], திருமதி ஞானசோதி, திருமதி சூரியகலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனேஸ்குமார் (சுவிஸ்], தர்மினி, றஜீவ்குமார், சிந்தியா, பிரதீபன். அனுசியா, பிரசாந்தன கவிதா. சுனிதா, துசிதா, நிவேதா ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [28-07-92) இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணியளவில் அவரது இலலத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவல் டிப்போ அருகாமையில் உள்ள சொட்டைக்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப் படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு கோண்டாவில்.

க. பொன்னுத்துரை [பண்டா]

[சி-6603]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கேவன்கோவில் மேற்கு வீதி 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8